**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 2032/2024**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாலகிருஷ்ணன் | **Caste** | : |
| **Father's Name** | : முருகன் | **Calling** | : டெய்லர் |
| **Village** | : கன்னிவாடி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 37 |
| | | **Dated** | : 22.04.2025 |

**22.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு. **பாலகிருஷ்ணன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் கன்னிவாடியில் குடியிருந்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்டவர்களான அன்னபூரணி எனது மனைவி, ஷசான்ந், சேதவ் எனது மகன்கள். சம்பவத்தின் போது ஷசான்ந்–ற்கு 5 வயது, சேதவ்–ற்கு இரண்டு வயது. கடந்த 10.05.2024 ம் தேதி பெரியகோட்டையில் ஒரு கேதத்திற்கு எனது TN 57 BA 9708 Splendor இருசக்கர வாகனத்தில் நான் எனது மனைவி மற்றும் மகன்களுடன் சென்றிருந்தேன். பின்னர் இரவு 8.30 மணிக்கு எனது மனைவி மற்றும் மகன்களுடன் பெரியகோட்டையிலிருந்து கிளம்பினேன். நான் திண்டுக்கல் திருச்சி பைபாஸ் லில் உள்ள கருர் ரோட்டிற்கு அருகே உள்ள மேம்பாலம் அமைந்திருக்கும் ரோட்டில் நான் குடும்பத்துடன் கிழக்கிலிருந்து மேற்காக இருசக்கர வாகனத்தில் வந்து

கொண்டிருந்தபோது TATA ஷோரும் எதிரே வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி காரில் கவனகுறைவாக வந்து நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் மோதிவிட்டார். இந்த சம்பவத்தில் எனது இடுப்பு பகுதி மற்றும் கால் ஆகிய இடங்களில் ஊமைகாயம், சிராய்ப்பு காயங்கள் பட்டது. எனது மனைவியின் முகம், கை, கால் சிராய்ப்பு காயமும், ஷசான்ந்–ற்கு உதடு, காது, தலை ஆகிய இடங்களில் காயம்பட்டது. சேதவ்–ற்கு வலது கால் முட்டியிலிருந்து பாதம் வரை காயம்பட்டது. பின்னர் காயம்பட்ட என்னையும், எனது குடும்பத்தாரையும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அப்போது நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.(**புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எனது மூத்த மகன் ஷசான்ந் –ஐ பரிசோதித்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அவருக்கு நெற்றியிலிருந்து தலையின் மைய பகுதி வரை கீறல் இருப்பதாக கூறி மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு ஷசான்ந்–ற்கு 3 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. இளைய மகன் சேதவ்–ற்கு ஒரு வாரம் சிகிச்சை அளிக்கப்பட்டது. போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ஒரு குறுக்கு ரோடு வந்து சேர்கிறது என்றால் சரிதான், ஆனால் நான் இடது பக்கமே அந்த ரோட்டை தாண்டிவிட்டேன். திண்டுக்கல் –திருச்சி புறவழிச்சாலையில் நந்தவனபட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் KMA நகர் பிரியும் இடத்தில் வழக்கு விபத்து நடந்தது என்றால் சரியல்ல, நான் மேம்பாலத்தை விட்டு கீழே இறங்கி விட்டேன், D–MART யை தாண்டி 10 அடி தூரத்தில் தான் விபத்து நடந்தது. விபத்து சர்வீஸ் ரோட்டில் நடந்ததா என்றால் இல்லை, மெயின் ரோட்டில் தான் நடந்தது. D–MART சர்வீஸ் ரோட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். D–MART ல் இருந்து எத்தனை அடியில் விபத்து நடந்தது என்றால் 100 மீட்டர் மேற்குபக்கம். முதல் விசாரணையில் இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன், அவ்வாறு விபத்து ஏற்பட்டிருந்தால் இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் சேதாரம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான், எனது இருசக்கர வாகனத்தில் பின்பக்கதிலும் சேதாரம் இருந்தது, நான்

சைடில் உள்ள கல்லில் மோதிதான் வாகனத்தின் முன் பக்கமும் சேதாரம் ஏற்பட்டது. காரின் எந்த பகுதி எனது இருசக்கரவாகனத்தின் மீது மோதியது என்றால் காரின் முன்பக்க நடுபகுதி மோதியது. எதிரி மருத்துவர் என்பதால் அவர் தான் எங்கள் நான்கு பேரையும் மருத்துவமனையில் அவர் தான் சேர்த்தார் என்றால் சரிதான். ஆனால் புகாரில் போக்குவண்டியில் மருத்துவமனைக்கு சென்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால், நான் ஆம்புலன்ஸ் க்கு போன் செய்து இருந்தேன், குழந்தைக்கு காயம் அதிகமாக இருந்ததால் அங்கிருக்கும் வாகனத்தில் அழைத்து சென்றார்கள், அந்த சமயத்தில் அது யாருடைய வாகனம் என்று நான் கவனிக்கவில்லை. மோதியதாக நான் சொல்லப்படும் வாகனத்தில் தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் நாங்கள் நான்கு பேரும், எதிரியையும் தவிர வேறு யாரும் இல்லை என்றால், விபத்து நடந்ததும் நிறைய பேர் வந்தார்கள். நான் சொல்வது போல் எந்த விபத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. KMA நகர் குறுக்கு சாலையிலிருந்து நான் தான் வேகமாக தேசிய நெடுஞ்சாலைக்கு வந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. என் மீது மோதமால் இருப்பதற்காக எதிரி அவருடைய காரை டிவைடரில் மோதி நிறுத்தினார் என்றால் சரியல்ல, எதிரியின் காருக்கு பின்னால் மற்றொரு கார் வந்தது, அந்த கார் ஹாரன் அடித்து கொண்டு வந்ததால் எதிரி அந்த வாகனத்திற்கு வழி விடுவதற்காக என் மீது மோதிவிட்டார், நான் கண்ணாடியில் பார்ப்பதற்குள் வாகனம் என் மீது மோதிவிட்டது. பின்னால் வந்த கார் ஹாரன் அடித்ததாகவும், எதிரி அதற்கு வழிவிட்டதாகவும் நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். குறுக்கு சாலையிலிருந்து, தேசிய நெடுஞ்சாலைக்கு வேகமாக வந்து ஏறிய போது வாகனங்கள் வருவதை பார்த்து பதட்டத்தில் நான் தடுமாறி கீழே விழுந்ததில் எங்களுக்கு காயம்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டதால் தான் 10.05.2024 ம் தேதி 21.00 மணிக்கு நடந்ததாக சொல்லப்படும் விபத்திற்கு 11.05.2024 ம் தேதி 13.00 மணிக்கு காலதாமதமாக பின் யோசனை செய்து புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW

Digitally signed by SOUMYA MATHEW
Date: 2025.04.22 16:31:05 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 2032/2024**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அன்னபூரணி | **Caste** | : |
| **Husband's Name** | : பாலகிருஷ்ணன் | **Calling** | : வீட்டுகுடித்தனம் |
| **Village** | : கன்னிவாடி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 36 |
| | | **Dated** | : 22.04.2025 |

**22.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 திருமதி.அன்னபூரணி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**எதிரி ஆஜர்**</u>

1. நான் திண்டுக்கல் கன்னிவாடியில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்டவர்களான பாலகிருஷ்ணன் எனது கணவர், ஷசான்ந், சேதவ் எனது மகன்கள். சம்பவத்தின் போது ஷசான்ந்–ற்கு 5 வயது, சேதவ்–ற்கு இரண்டு வயது. கடந்த 10.05.2024 ம் தேதி பெரியகோட்டையில் எனது அண்ணன் மனைவி இறந்ததாக தகவல் கிடைத்ததின் பேரில் நான், எனது கணவர் மற்றும் மகன்களுடன் எனது கணவர் இருசக்கர வாகனத்தில் பெரியகோட்டைக்கு சென்றிருந்தேன். இரவு சுமார் 8–8.15 மணியிருக்கும், நாங்கள் இருசக்கர வாகனத்தில் D–MART –க்கு எதிரே உள்ள ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக வந்து கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு பின்னால் வந்த கார் நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்னால் மோதிவிட்டது, கார் மோதியதில்

நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். இந்த சம்பவத்தில் எனக்கு வலது பக்க நெற்றி மற்றும் முகத்தில் சிராய்ப்பு காயமும், இடது பக்க கை, வலது பக்க முழங்காலிலும் சிராய்ப்பு காயம்பட்டது. எனது மகன் ஷசான்ந்–ற்கு மூக்கு, உதடு, தலையில் காயம்பட்டது. சேதவ்–ற்கு வலது காலில் காயம்பட்டது. எனது கணவருக்கு இடுப்பில் காயம்பட்டது. நாங்கள் கீழே விழுந்தவுடன் எங்களை எதிரியின் காரில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எனது மகன் ஷசான்ந்தை பரிசோதித்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் நெற்றியல் கீறல் இருப்பதாக கூறி மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள். நாங்கள் அவரை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது இளைய மகன் சேதவ்–ற்கு காலில் ஏற்பட்ட காயம் தழும்பாக மாறிவிட்டது. அவர் நடப்பதற்கு ஒருமாதம் ஆகிவிட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் விபத்து எதுவும் ஏற்படவில்லை, எனது கணவர் குறுக்கு ரோட்டிலிருந்து, தேசிய நெடுஞ்சாலையில் வேகமாக வந்து ஏறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.04.22 16:31:13 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 2032/2024**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிச்சைமுத்து | **Caste** | : |
| **Father's Name** | : ஜெயராஜ் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : பெரியகோட்டை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 45 |
| | | **Dated** | : 22.04.2025 |

**22.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–3 திரு. பிச்சைமுத்து ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் பெரியகோட்டையில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாலகிருஷ்ணன், அ.சா.2 அன்னபூரணி மற்றும் அவரது மகன்கள் ஷசான்ந், சேதவ் ஆகியோர்களை எனக்கு தெரியும், அவர் எனது உறவினர்கள். கடந்த 10.04.2024 ம் தேதி பெரியகோட்டைக்கு ஒரு கேததிற்கு பாலகிருஷ்ணன் அவரது குடும்பத்தாருடன் இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார். இரவு சுமார் 9.00 மணியிருக்கும், பாலகிருஷ்ணன் அவரது மனைவி மற்றும் மகன்களுடன் இருசக்கர வாகனத்தில் D–MART –க்கு அருகே உள்ள பாலத்தில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்தார். நானும், சங்கரலிங்கமும் அவருக்கு பின்னால் 200 அடி துரத்தில் இருசக்கர வாகத்தில் வந்துகொண்டிருந்தோம். அப்போது திடிரென சத்தம் கேட்டது. நாங்கள்

அவர்கள் அருகே சென்று பார்த்தோம். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த கார் மோதி அவர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். ஆஜர் எதிரிதான் அந்த காரை ஓட்டிய நபர் ஆவார். அதன்பின்னர் எதிரியின் காரில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தோம். போலிசார் மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

அ.சா.1 பாலகிருஷ்ணன் எனக்கு என்ன உறவு என்றால் அ.சா.2 அன்னபூரணி எனது மனைவியின் தங்கை. போலீசார் விசாரணையிலும் விபத்து D–MART க்கு அருகே உள்ள மேம்பாலத்தில் நடந்ததாக தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் திண்டுக்கல் GH –ற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 10.00 மணியிருக்கும். நான் டிரைவராக இருப்பதால் காரின் வகைகள் மற்றும் விபரங்கள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த காரின் நிறம் என்ன என்றால் இருட்டாக இருந்ததால் எனக்கு நிறம் தெரியவில்லை. அது என்ன வகை கார் என்றால், அதை நான் படித்து பார்க்கவில்லை. மேம்பாலத்திற்கு இடது கை பக்கம் சர்வீஸ் ரோட்டில் D–MART உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் D*–MART அருகே உள்ள மேம்பாலத்தில் இந்த விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல, நான் பார்க்காத ஒரு சம்பவத்தை உறவினர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முந்தைய தினம் இறந்து போனவர் எனக்கு யார் என்றால் பெரியப்பா. பெரியப்பா இறந்த நிலையில் நான் அன்றைய தினம் சம்பவயிடத்திற்கு வரவேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.04.22 16:31:20 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 2032/2024**

**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சங்கரலிங்கம் | **Caste** | : |
| **Father's Name** | : மாரியப்பன் | **Calling** | : மில் வேலை |
| **Village** | : செங்குளத்துபட்டி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 41 |
| | | **Dated** | : 22.04.2025 |

**22.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திரு. சங்கரலிங்கம் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் செங்குளத்துபட்டியில் குடியிருந்து மில்லில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாலகிருஷ்ணன், அ.சா.2 அன்னபூரணி மற்றும் அவரது மகன்கள் ஷசான்ந், சேதவ் ஆகியோர்களை எனக்கு தெரியும், அவர் எனது உறவினர்கள். கடந்த 10.04.2024 ம் தேதி பெரியகோட்டைக்கு ஒரு கேதத்திற்கு பாலகிருஷ்ணன் அவரது குடும்பத்தாருடன் இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார். இரவு சுமார் 8.00 முதல் 9.00 மணியிருக்கும், பாலகிருஷ்ணன் அவரது மனைவி மற்றும் மகன்களுடன் இருசக்கர வாகனத்தில் D–MART –க்கு அருகே உள்ள மேம்பாலத்தில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்தார். நானும், பிச்சைமுத்துவும் அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் 80 அடி துரத்தில் வந்துகொண்டிருந்தோம். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி

சென்ற கார் பாலகிருஷ்ணன் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியாது. அந்த கார் மோதி அவர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். ஆஜர் எதிரிதான் அந்த காரை ஓட்டிய நபர் ஆவார். அதன்பின்னர் எதிரியின் காரில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும், பிச்சைமுத்துவும் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்திற்கும், அ.சா1 பாலகிருஷ்ணன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்திற்கும் இடையே ஒரு கார் மட்டும் தான் வந்தது வேறு வாகனம் வரவில்லை என்றால் இல்லை. D–MART அருகே உள்ள மேம்பாலத்தில் இந்த விபத்து நடைபெறவில்லை சரியல்ல. எதிரியால் காயம்பட்டவர்களுக்கு எதிராக எந்த விபத்தும் ஏற்படுத்தபடவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்டவர்கள் எனக்கு உறவினர்கள் என்பதால் விபத்தை நேரில் பார்த்தாக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.04.22 16:31:30 +0530

Judicial Magistrate No.I
Dindigul.